ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1764/14 - 2012 ජුනි මස 27 වැනි බදාදා - 2012.06.27

*1764/14 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

**2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பொதுசன சுகாதாரத் தீங்குகளைத் தவிர்ப்பதற்கான நியதிச்சட்டம்**

*2012.03.20 ஆந் திகதி நடைபெற்ற மேல் மாகாண மாகாண சபை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு 2012.06.21 ஆந் திகதி கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற மேல் மாகாண மாகாண சபையின் 2012 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மேல் மாகாண மாகாண சபையின் பொதுசன சுகாதாரத் தீங்குகளைத் தவிர்ப்பதற்கான நியதிச் சட்டம் 2012.06.21 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனை இங்கு வெளிப்படுத்துகின்றேன்.*

ஜகத் அங்கசே,<br>
சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி,<br>
நன்னடத்தை, மகளிர் விவகாரம், சிறுவர் பாதுகாப்பு,<br>
சபை நடவடிக்கை அமைச்சர்,<br>
மேல் மாகாணம்.

சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி,<br>
நன்னடத்தை, மகளிர் விவகாரம், சிறுவர் பாதுகாப்பு,<br>
சபை நடவடிக்கை அமைச்சு,<br>
மேல் மாகாணம்,<br>
சுதந்திர சதுக்கம்,<br>
கொழும்பு 7,<br>
2012, யூன் 22.

**2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பொதுசன சுகாதாரத் தீங்குகளைத் தவிர்ப்பதற்கான நியதிச்சட்டம்**

*நீண்ட பெயர்.*

இந்நியதிச்சட்டம் மேல் மாகாணத்தின் பொதுசன சுகாதாரத்தை மேம்படுத்துதலையும் காத்தலையும், நுளம்புகளினால் ஏற்படும் தீங்குகளையும் நோய்களையும் தவிர்ப்பதற்கும் மற்றைய பொதுசன சுகாதாரத்திற்கான தீங்குகளை ஒழிப்பதற்கும் அது தொடர்பான அல்லது பின்விளைவான விடயங்களுக்கும் விதி பிரமாணங்களைத் திட்டமிடுவதற்கானதாகும். இந்நியதிச்சட்டம் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1882 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, தீங்கான செயல்கள் கட்டளை சட்டத்திற்கும் 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கம் கொண்ட நுளம்புகள் பெருகுதலைத் தவிர்ப்பதற்குமான சட்டத்திற்கும் அமைவானதாகும்.

இந்நியதிச் சட்டத்தினால் மாகாண உள்ளூராட்சித் தாபனங்களுக்கு சட்டரீதியாக உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் ரத்து செய்யப்படுதலோ வரையறுக்கப்படுதலோ நிகழாது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு கட்டளையிடப்படுகிறது:

குறுந் தலைப்பும் நடைமுறைக்கு வரும் தினமும்.

1. இந்நியதிச் சட்டம் மேல் மாகாண மாகாண சபையின் 2012 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கத்தைக் கொண்ட பொதுசன சுகாதாரத் தீங்குகளைத் தவிர்ப்பதற்கான நியதிச்சட்டம் என்று அழைக்கப்படுவதோடு அது ஆளுநரின் அங்கீகாரத்தைப் பெற்ற தினத்தில் இருந்து அமுலாக்கப்பட வேண்டும். அத்திகதி அமைச்சரினால் வர்த்தமானியில் அறிவித்தல் வழங்குவதன் மூலம் வெளியிடப்படல் வேண்டும்.

2. இந்நியதிச்சட்டத்தின் கீழ் பின்வரும் செயல்களைச் செய்தல் குற்றமாகும் :

கழிவுப் பொருள்களை நீரில் இடுதல்

(அ) எவரினாலேனும் ஏதேனும் வடிகாலிற்கு, குழியிற்கு, நீர் பாதைக்கு, குளத்திற்கு, நீர்த் தேக்கத்திற்கு, கிணற்றுக்கு, நீர்ப் பாத்திரத்திற்கு, நீரோட்டத்திற்கு அல்லது நீர்ப்பாசனத்திற்கு மிருகமொன்றின் மலம் அல்லது ஏதேனும் அசிங்கமான குப்பை அல்லது துர்நாற்றத்துடனான ஏதேனுமொன்றை எறிதல் அல்லது ஏதேனும் அசுத்தமான அல்லது துர்நாற்றமுள்ள திரவமொன்றை அல்லது பொருளொன்றை தான் வசிக்கும் வீட்டில், கட்டடத்தில் அல்லது காணியில் வழிந்தோடுவதற்கு அல்லது கழுவிச் செல்வதற்கு வழிப்படுத்துதல் அல்லது இடமளித்தல் அல்லது அவ்வாறான நீர் எந்த அளவிற்கேனும் அசுத்தமடையுமாறு அல்லது மாசடையுமாறு ஏதேனும் செய்தல் ;

மனித உணவிற்குப் பொருத்தமற்றதை விற்பனைக்கு வைத்து இருத்தல்.

(ஆ) எவரினாலேனும் சந்தையொன்றில், கடையொன்றில், கட்டடமொன்றில், அங்காடிகளில் இறைச்சி, கோழி போன்ற பறவைகள், மீன், பழவகை அல்லது மரக்கறி ஆகியவற்றை விற்பனை செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் இடமொன்றில், மனித உணவிற்குப் பொருத்தமற்ற மிருகமொன்றை, மலம், இறைச்சி, மீன், பழவகை அல்லது மரக்கறியை வைத்திருத்தல் அல்லது வைப்பதற்கு இடமளித்தல் அல்லது ஏதேனுமோர் இடத்தில் அல்லது பாதையில் அவ்வாறானவற்றை வைத்தல் அல்லது வைப்பதற்கு இடமளித்தல் ;

தீங்கானவற்றை உணவாக விற்றல்.

(இ) எவரினாலேனும் ஏதேனுமொன்று மனித உணவாக அல்லது பானமாகப் பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற விதத்தில் உள்ளது அல்லது பொருத்தமற்ற விதத்தில் உள்ளது என அறிந்து கொண்டிருந்து அல்லது அவ்வாறாக இருக்கும் என நம்புவதற்கு விடயமிருந்தும் அதனை மனித உணவிற்காக அல்லது பானத்திற்காக விற்பதற்கு முன்வைத்தல் அல்லது வெளிப்படையாக வைத்தல் ;

கழிவுகளை வீதியில் வைத்து அல்லது வெளிப்படையான இடங்களில் எறிதல்.

(ஈ) எவரினாலேனும் மண் அல்லது கழிவுநீர் அல்லது குப்பை அல்லது சாம்பல் அல்லது கூளம் அல்லது உடைந்த கண்ணாடி அல்லது மண் பானை அல்லது வேறு ஏதேனும் கழிவு அல்லது சுகாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்படுமாறு ஏதேனும் பண்டத்தை, பொருளை அல்லது திரவத்தை ஏதேனுமொரு விதத்தில் பாதையில் அல்லது பொது இடமொன்றில், குறுக்குப் பாதையில், கானில் எறிதல் அல்லது இடுதல் அல்லது தனது சேவகர்களுக்கு அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல் ;

வாகனங்களை கழுவுதல்.

(உ) எவரேனுமொரு தனிநபரினால் ஏதேனுமொரு பிரதான பாதை, வீதி, பெரும்பாதை, ஒற்றையடி பாதை அல்லது பிரவேச பாதை அசுத்தமடையும் விதத்தில் அல்லது பொதுசன சுகாதாரத்திற்குத் தீங்கேற்படுமாறு நீர் திணிவொன்றில் அல்லது கிணறொன்றில் அல்லது ஏதேனும் நீர் மூலத்தில் இருந்து நீரைப் பயன்படுத்தி வாகனங்களைக் கழுவுதல் ;

பிரவேச பாதைகளில் அல்லது பிரசித்தமான இடங்களில் மிருகங்கள் மலங்கழித்தல்.

(ஊ) எவரேனும் ஏதேனும் பிரதான பாதையில் பெரும்பாதையில், பாதையில், ஒற்றையடி பாதையில், பிரவேசப் பாதையில் அல்லது பிரசித்தமான இடமொன்றில் ஏதேனும் மிருகத்திற்கு அல்லது மிருகங்களுக்கு மலங்கழிப்பதற்கு வழிப்படுத்துதல் அல்லது இடமளித்தல் ;

(எ) பாதையொன்றில், வீதியொன்றில் அல்லது பிரசித்தமான பெரும்பாதையொன்றில் அல்லது அவ்வாறான மக்கள் செறிந்துள்ள பிரதேசத்தில் அமைந்தள்ள வீடொன்றில், கட்டடமொன்றில் அல்லது காணியொன்றில் வசிக்கும் எவரினாலேனும் உரிய பாத்திரத்தினுள் அல்லது நன்கு மூடப்பட்ட ஓரிடத்தில் இடமாமல் எந்த குப்பைக் குவியலை, மிருக உறுப்புகளை, கழிவுக் குவியலை அல்லது வேறெந்த விஷ வாயுவை அல்லது துர்நாற்றத்தை வெளியிடுமொன்றை வைப்பதற்கு இடமளித்தல், அவ்வாறான பாத்திரமொன்றை அருவருப்பான நிலையில் அல்லது துர்நாற்றம் வீசும் நிலையில் இருக்கச் செய்தல் அல்லது அதில் உள்ளவற்றை அதிலிருந்து நீக்கி அதனை சுத்தஞ் செய்வதற்கும் தூய்மையாக்குவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்காமல் புறக்கணித்தல் ; — குப்பை அல்லது அதுபோன்றவற்றை வைத்தல்.

(ஏ) வாடகைக்குக் கொடுக்க முடியுமோ முடியாதோவெனினும் ஏதேனுமொரு பாதையில், வீதியில் அல்லது பிரசித்தமான நெடுஞ்சாலையில் அல்லது அவ்வாறான அயலில் அமைந்திருப்பினும் ஏதேனுமொரு வீட்டின், கட்டடத்தின் அல்லது காணியின் உரிமையாளரோ அல்லது அவ்வாறான இடத்தில் வசிப்பவரோ அல்லது எவரினாலும் யாருக்கேனும் சுகாதார அனர்த்தம் ஏற்படுமாறு அல்லது எவரினதும் சுகாதாரத்திற்குத் தீங்கு ஏற்படுமாறு அசுத்தமாக அல்லது சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக அவ்விடத்தை வைத்திருத்தல் அல்லது வைத்திருப்பதற்கு இடமளித்தல் அல்லது அது பொதுசன சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாகுமாறு தாவரங்களினால் மூடப்படுவதற்கு இடமளித்தல் ; — இடமொன்றை அசுத்தமாக வைத்திருத்தல்.

(ஐ) எவராக இருப்பினும் தான் வசிக்கும் அல்லது தனக்கு உரித்தான வீடொன்றில், கட்டடமொன்றில் அல்லது காணியொன்றில் அல்லது மேற்றளத்தில் பொதுசன சுகாதாரத்திற்கு தீங்கான குழியொன்றை அல்லது நீரோடையை அல்லது சாக்கடையை அல்லது மலசலகூடக் குழியொன்றை அல்லது அவ்வாறான வேறு பாத்திரமொன்றை அல்லது இடமொன்றை வைத்திருத்தல் ; — தீங்கு ஏற்படுத்தும் அருவருப்பான துர்நாற்றம் வீசும் வடிகால்.

(ஒ) எவராக இருப்பினும் தான் வசிக்கும் வீட்டில், கட்டடத்தில் அல்லது தனக்கு சொந்தமான காணியில், மாடுகள், ஆடுகள், பன்றிகள், கோழிகள், வாத்துகள், வான்கோழிகள் அல்லது வேறு பறவைகளை சட்டத்திட்டங்கள், கட்டளைச்சட்டம், நியதிச்சட்டம் அல்லது விதிமுறைகள் ஊடாக விதிக்கப்பட்டுள்ள முறைசார் தரங்களுக்குப் புறம்பாகப் பொது மக்களுக்குத் தீங்கொன்றாகுமாறு அல்லது யாரேனும் ஒருவரின் சுகாதாரத்திற்குத் தீங்கேற்படுமாறு வைத்திருத்தல் ; — மாடுகள், ஆடுகள், பன்றிகள் போன்ற மிருகங்களை வைத்திருத்தல்.

(ஓ) வீடொன்றின், கட்டடமொன்றின் அல்லது மதிலொன்றின் உரிமையாளர் எவரினாலேனும் அது இடிந்து விழும் நிலையில் இருப்பதற்கு இடமளித்தல் அல்லது அந்த வீட்டில் அல்லது கட்டடத்தில் வசிப்பவர்களுக்கு அல்லது அயலவர்களின் வீடுகளுக்கு அல்லது கட்டடங்களுக்கு அல்லது அவற்றில் வசிப்பவர்களுக்கு அல்லது பாதசாரிகளுக்கு ஆபத்து விளைவிக்கும் நிலையில் இருப்பதற்கு இடமளித்தல் ; — வீடு போன்றவற்றை இடிந்து விழும் நிலையில் அல்லது விழக்கூடிய நிலையில் வைத்திருத்தல்.

(ஔ) எவரினாலேனும் தான் வசிக்கும் இடத்தினுள் எவ்விடத்திலேனும் கழிவு நீர் அல்லது மாசடைந்த நீர் இருப்பதற்கு இடமளித்தல் அல்லது மலசலகூடமொன்றில் அல்லது மலசலகூட குழியில் இருப்பவை அதைவிட்டு கசிந்து வெளியேறுவதற்கு இடமளித்தல் ; — அசுத்தமான அல்லது மாசடைந்த நீரை அவ்வாறே இருக்க இடமளித்தல்.

(ஃ) மேல் மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள எந்தவோர் இடத்தையும் உரிய அதிகார சபையிடம் இருந்து அனுமதிப் பத்திரம் பெற்றிருப்பினும் பொதுசன சுகாதாரத்திற்கு தீங்குகள் அல்லது அவ் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி அல்லது தீங்கு ஏற்படும் விதத்தில் ஏதேனும் தொழிற்சாலையாக அல்லது வியாபார இடமாகப் பயன்படுத்துதல் ; — பொதுமக்களின் சுகாதாரத்திற்குத் தீங்காகுமாறு தொழிற்சாலை ஒன்றை நடத்துதல்.

(க) எவரினாலும் யாருக்கேனும் தீங்கேற்படுமாறு அல்லது யாரேனுமொருவரின் சுகாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்படுமாறு ஏதேனுமோர் இடத்தில் ஏதேனுமொரு சாமானை, பொருளை அல்லது திரவத்தை வைத்தல் அல்லது வைத்திருத்தல் ; — சுகாதாரத்திற்குத் தடையாகுமாறு கழிவுப் பொருள்களை வைத்திருத்தல்.

(கா) எவரினாலேனும் ஏதேனுமொரு வியாபார இடத்தில் அல்லது மக்கள் நடமாடும் திறந்த இடத்தில் ஒலிபெருக்கி அல்லது தொலைக்காட்சிப் பெட்டி அல்லது வேறேதும் ஊடகம் மூலமாக பொது மக்களுக்குப் பாதிப்பேற்படும் விதத்தில் பெரும் சத்தத்துடன் ஒலிபரப்புதல், ஒலிசெலுத்துதல் அல்லது ஒலிவியாபித்தல் ; — வானொலி மற்றும் வேறு ஊடகங்கள் மூலம் தொந்தரவு ஏற்படுத்துதல்.

ஒலியினால் ஏற்படும் தொந்தரவு.

(கி) எவரினாலேயேனும் எந்தவொரு தனியார் வசிப்பிடத்தினுள் அச்சுற்றாடலின் அயலில் உள்ள வசிப்பிடங்களுக்கு தொந்தரவு ஏற்படுமாறு பெருஞ்சத்தத்தைக் கொண்ட ஒலிபெருக்கி, வானொலி, தொலைக்காட்சி அல்லது இறுவட்டுப் பொறி அல்லது அவ்வாறான எவ்விதமான பொறியினூடாக ஒலிபெருக்குதல், ஒலிபரப்புதல் அல்லது ஒலிசெலுத்துதல் ;

ஒலி சனனிக்கும் விதத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

(கீ) பொதுசன சுகாதாரத்திற்குத் தீங்கேற்படுமாறு எந்தத் தனிநபரினாலும் ஏதேனுமொரு சுற்றாடலில், வீட்டில், வியாபார தலத்தில், வதிவிட விடுதியில் அல்லது உணவகத்தில் வசிப்பிடங்களுக்கு, பாடசாலைகளுக்கு, மருத்துவசாலைகளுக்கு அல்லது மக்கள் நடமாடும் இடங்களுக்கு தொந்தரவு ஏற்படுமாறு ஒலி ஏற்படும் விதத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், உணவு தயாரித்தல், கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், பட்டறை வேலை செய்தல், தொழிற்சாலை ஒன்றை நடத்துதல் அல்லது வேறு விதத்தில் தொந்தரவு தரும் ஒலி ஏற்படுத்தும் விதத்தில் காரியமாற்றுதல்;

மேலே உபவிதிகள் (கா), (கி), (கீ) ஆகியவற்றுக்கான ஒலி மட்டத்தைத் தீர்மானிக்கும் போது 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கக் கொண்ட தேசிய சுற்றாடல்சார் சட்டம் மற்றும் அதன் பின்னர் காலத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் கீழ் உள்ள ஒலி எல்லை எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும்.

காண் மற்றும் வீதிகளை தடைசெய்தல்.

(கு) எந்தவொரு தனிநபராலும் பிரதான வீதி, வீதி, பெரும்பாதை, ஒற்றையடிப் பாதை, நடைபாதை, அல்லது பாதைசார்ந்து பேணப்படும் கான் தடைபடும் விதத்தில் அனுமதியற்ற நிர்மாணஞ் செய்தல், கட்டடப் பொருட்கள், சேதமடைந்த பொருட்கள், மோட்டார் வாகன எஞ்சின் பழுதுபார்த்தல் அல்லது மரக் குற்றி அல்லது அறுக்கப்பட்ட மரம் அல்லது பலகை அல்லது எவ்வித பொருளை களஞ்சியப்படுத்துதல், வைப்பு செய்தல் அல்லது வைத்தல் ;

கழிவு நீரையும் மலசலகூட நீரையும் வழிந்தோடச் செய்தல்.

(கூ) எவரினாலேனும் எந்தவொரு பிரதான பாதைக்கு, வீதிக்கு, பெரும்பாதைக்கு, ஒற்றையடி பாதைக்கு, பிரவேச பாதைக்கு அல்லது அப்பாதையில் உள்ள சாக்கடைக்கு அல்லது பிரசித்தமான இடத்திற்கு அடுத்துள்ள காணிக்கு எந்த தனியார் அல்லது பொது சுற்றாடலில் இருந்து வெளியேற்றப்படும் அசுத்த நீரை அல்லது மலசலகூட கழிவுகளை இடுதல் அல்லது வழிந்தோடச் செய்தல்.

(கெ) இயற்கையாக நீர் வழிந்தோடுவதற்கு உள்ள நீர் பாதை வழியே அந்நீர் செல்வதற்கு இடையூறு செய்தல் ;

விதி 2 இல் கீழ் காட்டப்பட்டுள்ள சில குற்றங்களுக்கு தண்டம் விதிக்க முடியும் என்பது.

3. (1) மேலே விதி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள உப விதிகள் அ, ஆ, ஈ, உ, ஊ, எ என்பவற்றில் காட்டப்பட்டுள்ள குற்றங்களுள் எதனையேனும் செய்யும் எவராயினும் இந்நியதிச் சட்டத்தின்கீழ் குற்றமொன்றிற்கு குற்றவாளியாவார்.

(2) மேலுள்ள உப விதி 1 இற்கு ஏற்ப ஏதேனும் குற்றத்திற்கு குற்றவாளியாகும் எவரேனும் ஒரு நபர் நீதவான் முன்னிலையில் நடத்தப்படும் நேரடி வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படும்போது ரூபா மூவாயிரத்திற்குக் குறையாததும் ரூபா இருபத்தையாயிரத்திற்குக் கூடாததுமான தண்டத்திற்கு உள்ளாக்கப்படுவதற்கு கட்டளை இடுவதற்கு நீதிவானுக்கு முடியும்.

(3) மேலுள்ள உபவிதி 3 (2) இன் கீழ் தண்டமாக விதிக்கப்பட்ட எந்தப் பணமும் நீதிவானினால் மாகாண சபை நிதியத்திற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.

பொது மக்கள் சுகாதார தீங்கை தவிர்ப்பதற்குப் பொருத்தமான சில நடவடிக்கைகளை எடுக்குமாறு பணித்தல்.

4. (1) மேலே விதி 2 இன் ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, ஃ, க, கா, கி. கீ, கு, கூ, கெ என்பவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப ஏதேனும் சுற்றாடலில் அல்லது அதில் வைக்கப்பட்டுள்ள அல்லது நடத்தப்பட்டு வரும் ஏதேனும் ஒன்று பொது மக்களின் சுகாதாரத்திற்கு உகந்ததாக இல்லை என உரிய அதிகாரம் உள்ளவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரிக்குத் தெரியப்படும் சந்தர்ப்பத்தில் உரிய அதிகாரம் உள்ளவர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியினால் எழுத்துமூலமான அறிவித்தலின் மூலமாக பின்வரும் நடவடிக்கைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையை அவ்வெழுத்துமூல அறிவித்தலில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் கடைப்பிடிக்குமாறு அல்லது உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அச்சுற்றாடலின் உரிமையாளருக்கு, வதிவாளருக்கு அல்லது பொறுப்பாளருக்குக்கு கட்டளையிட முடியும்.

(அ) ஏதேனும் வீதியில், பெரும்பாதையில் அல்லது பிரசித்த பாதையில் அல்லது அவ்வாறான அயலில் அமைந்துள்ள ஏதேனும் வீட்டில், கட்டடத்தில் அல்லது காணியில் யாரேனும் ஒருவரின் சுகாதாரத்திற்குத் தீங்கேற்படாதவாறு சுத்தமாக வைத்திருத்தல் ;

(ஆ) பொது மக்களின் சுகாதாரத்திற்கு உகந்தது அல்லாத துர்நாற்றம் வீசும் அகழி, ஓடை, வடிகால், குழி, மலசலக்கூட குழி அல்லது வேறு அவ்வாறான அல்லது பாத்திரமொன்றை அவ்விடத்தில் இருந்து அகற்றுதல் அல்லது பொதுமக்களுக்குத் தீங்கேற்படாதவாறு ஒழுங்கு செய்தல்.

(இ) பொதுமக்களின் சுகாதாரத்திற்குத் தீங்கற்ற விதத்தில் மாடுகள், ஆடுகள், பன்றிகள், வாத்துகள், வான்கோழிகள் அல்லது வேறு பறவைகளை வளர்த்தல்.

(ஈ) இடிந்து விழும் வீடொன்று, கட்டடமொன்று அல்லது மதிலொன்று வதிவாளர்களுக்கு அல்லது அயலவருக்கு ஆபத்தில்லாதவாறு ஒழுங்கு செய்தல் அல்லது அகற்றுதல்.

(உ) ஏதேனும் வீதியின், பெரும்பாதையின், பாதையின் அல்லது பிரசித்த வடிகாலின்மீது அவ்வீதியை, பெரும்பாதையை, பாதையை, வடிகாலை தடங்கல் செய்யும் விதத்தில் ஏதேனும் வேலி, மதில், கொங்கிறீட் அல்லது இரும்பு மூடி, கடைத் தொட்டியை அகற்றுவதற்காக அல்லது கட்டாதிருப்பதற்காக

(ஊ) ஏதேனுமோர் இடத்தில் வசிக்கும் எவராக இருப்பினும் அவ்விடத்தினுள் ஏதேனுமோர் இடத்தில் அசுத்த நீர் அல்லது மாசடைந்த நீர் இருப்பதற்கு இடமளித்தல் அல்லது மலசலகூடமொன்றில் அல்லது மலசலகூடக் குழி ஒன்றில் உள்ளவை வெளியே வழிந்தோடாதவாறு அல்லது கசியாதவாறு நிறுத்துதல்.

(எ) ஏதேனும் தொழிற்சாலை ஒன்றை அல்லது வியாபார நிலையத்தை பொதுமக்களுக்கு தீங்கேற்படாதவாறு நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஏ) ஏதேனும் பண்டம் பொருள் அல்லது திரவம் ஒன்றை பொதுமக்களுக்குத் தீங்கு அல்லது பொதுமக்களின் சுகாதாரத்திற்கு தீங்கு ஏற்படுத்தாதவாறு வைத்திருத்தல்.

(ஐ) பொதுமக்கள் நடமாடும் இடமொன்றில் அல்லது வியாபார இடமொன்றில் ஒலிபெருக்கி, தொலைக்காட்சிப்பெட்டி, அல்லது வேறெந்த இலத்திரனியல் ஊடகமொன்றின் வழியாக பொதுமக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் விதத்தில் அதிக சத்தத்துடன் செய்யப்படும் ஒலிபரப்புகளை, ஒலிபரிமாற்றங்களை அல்லது ஒலிவியாபித்தலை நிறுத்துதல்.

(ஒ) எந்தவொரு தனியார் வதிவிடத்தினுள் அச்சுற்றாடலின் அயலவர் வசிப்பிடங்களுக்கு தொந்தரவாகுமாறு அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கி, வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி, அல்லது இறுவட்டுப் பொறி அவ்வாறான எந்தப் பொறியின் ஊடாகவும் ஒலிபரப்புதலை, அல்லது ஒலிபெருக்குதலை செய்யாதிருத்தல் அல்லது ஒலி வியாபித்தலை நிறுத்துதல்.

(ஓ) வசிப்பிடங்களுக்கு, பாடசாலைகளுக்கு, வைத்தியசாலைகளுக்கு, அல்லது வேறு பொதுமக்கள் வசிக்கும் இடங்களுக்கு அல்லது நடமாடும் இடங்களுக்கு தொந்தரவு ஏற்படும் விதத்தில் ஒலி ஏற்படுமாறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல், உணவு உற்பத்தி செய்யாதிருத்தல், தொழிற்சாலை நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல், கைத்தொழில் வேலைகள் செய்யாதிருத்தல் அல்லது தொழிறச்சாலை ஒன்றை நடத்தாதிருத்தல் அல்லது வேறெந்த தொந்தரவு ஏற்படுத்தும் விதத்தில் நடவடிக்கை செய்யாது இருத்தல்.

(ஔ) பிரதான பாதைக்கு, பெரும் பாதைக்கு, ஒற்றையடி பாதைக்கு, நடைபாதைக்கு, அல்லது பாதை தொடர்பாகப் பேணப்படும் வடிகாலிற்கு தடையேற்படும் விதத்தில் ஏதேனும் அங்கீகாரமற்ற நிர்மாணத்தை அகற்றுவதற்கு அல்லது கட்டடப் பொருட்கள், சிதைந்த பொருட்கள், மரக்குற்றி, அரிந்த பலகை அல்லது மரம் அல்லது வேறெந்த விதமான பொருட்களையும் களஞ்சியப்படுத்தாது இருத்தல் அல்லது வைப்பு செய்யாது இருத்தல் அல்லது மோட்டார் வாகனங்களை அல்லது எஞ்சின்களைப் பழுதுபார்க்காது இருத்தல்.

(ஃ) எந்தவொரு பிரதான பாதைக்கு, பெரும்பாதைக்கு, ஒற்றையடி பாதைக்கு, பிரவேசப் பாதைக்கு அல்லது அப்பாதையின் வடிகாலுக்கு அல்லது பிரசித்த ஓர் இடத்திற்கு அல்லது அடுத்துள்ள ஓர் இடத்திற்கு ஏதேனும் தனியார் அல்லது பொது சுற்றாடலில் இருந்து வெளியேற்றப்படும் அசுத்த நீரை அல்லது மலகூட அல்லது சலகூட கழிவுப் பொருள்களை இடாதிருத்தல் அல்லது வழிந்தோடச் செய்யாதிருத்தல்.

(க) இயற்கையாக நீர் வெளியேறுவதற்கு உள்ள நீர்ப்பாதை வழியே அந்நீர் வழிந்து ஓடுவதற்குத் தடை ஏற்படுத்தாது இருத்தல் அல்லது தடையை அகற்றுதல்.

*4(1) உட்பிரிவின்கீழ் நியமங்களுக்கு இணங்கியதாக செயற்படாதது தவறாகும்.*

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதி 4 இன் உப விதி 1 இன் பிரகாரம் ஏதேனும் தீங்கு அல்லது பொதுமக்களின் சுகாதாரத்திற்குத் தீங்கான ஒன்றைச் செய்யாதிருப்பதற்கு அல்லது நீக்குவதற்கு அல்லது நிறுத்துவதற்குச் செய்யப்படும் கட்டளைகளை அத்துமீறும் அல்லது அதற்கு ஏற்ப செயற்படுதலைப் புறக்கணிக்கும் எவரும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாவார்.

(3) மேலுள்ள விதி 2 இற்கு ஏற்ப ஏதேனும் குற்றத்திற்கு குற்றவாளியாகும் எவரும் இந்நியதிச்சட்டத்தின் விதி 8 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தண்டனைக்கு உட்படுவார்.

*நுளம்புகளினால் தொற்றும் நோய்களையும் தீங்குகளையும் தவிர்க்கும் செயலொழுங்கு.*

5. நுளம்புகளினால் தொற்றும் சகல நோய்களையும் தவிர்த்தலையும் நீக்குதலையும் உறுதிப்படுத்தும் காரியத்தையும் நுளம்புகள் பெருகும் இடத்தை அழிக்கும் நாசஞ் செய்யும் காரியத்திற்காகக் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள செயலொழுங்கை சகல சுற்றாடல்களினதும் உரிமையாளரினாலும் பொறுப்பாளரினாலும் வதிவாளரினாலும் அல்லது உரிமையாளரினால் அல்லது பொறுப்பாளரினால் அல்லது வதிவாளரினால் மேற்கொள்ளப்படும்.

(1) ஏதேனும் சுற்றாடலில் அல்லது அதனுள் உள்ள நீர்தேங்கி இருக்கக்கூடிய திறந்த தகரப் பேணி, போத்தல், பெட்டி, சிரட்டை, தேங்காய் கோம்பை, ரயர் அல்லது வேறு ஏதேனும் பொருளை அல்லது பாத்திரத்தை அகற்றுவதற்கு, அழிப்பதற்கு அல்லது வேறு விதத்தில் நீர்தேங்கி நிற்காதவாறும் பயனுள்ளவாறு பாதுகாப்பானதாக நீக்குதல் ;

(2) மழைப் பீலி, பீலி நீர் வழிந்தோடக்கூடிய குழாய் அல்லது வடிகால்களில் நீர் நன்றாக செல்லக்கூடியவாறு சகல தடைகளையும் நீக்குதல் ;

(3) நுளம்புகள் பெருகுவதைத் தவிர்க்கக்கூடியவாறு நீர்ப்பாத்திரங்கள், நீர்த் தாங்கி, குளிரூட்டி, குளிர்சாதனப் பெட்டி அல்லது நீரைத் தேக்கி வைக்கக்கூடிய வேறு பாத்திரங்களை மூடி வைத்து நல்ல நிலையில் பேணுதல் ;

(4) சுற்றாடலில் அமைந்துள்ள ஏதேனும் கிணற்றையும் அதன் சுற்றுப்புறத்தையும் நல்ல நிலையில் பேணிச் செல்வதன் மூலம் அதனை நுளம்புகள் பெருகாத விதத்தில் ; பேணிச் செல்வதும் அதனூடாக நுளம்புகள் பெருகுவதைத் தவிர்த்தலும் ;

(5) ஏதேனும் சுற்றாடலில் உள்ள ஏதேனும் செயற்கை நீர்த்தேக்கம் அல்லது தடாகத்தை நுளம்பு பெருகாதவாறு வைத்திருத்தல் ;

(6) வதிவிட இடமாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் சுற்றாடலில் அமைந்துள்ள கட்டிடத்தில் அல்லது கட்டமைப்பில் உள்ளே அல்லது வெளியே அமைந்துள்ள நுளம்புகள் பெருகக்கூடிய விதத்தில் நீரைத் தேக்கி வைக்க உதவும் மரவகைகளும் தாவரங்களும் தங்கி நிற்கும் இடமாக அமைந்து இருப்பினும் புதர், ஏதேனும் அடர்த்தியும் வேறு சகல வகையான தாவரங்களையும் நீக்குதல் அல்லது ஆபத்தை உரியவாறு நீக்குதல்.

(7) சுற்றாடலில் அல்லது அதனுள் நுளம்புகள் பெருகுவதற்கு வசதியான வேறு ஏதேனும் பின்னணியை நீக்குதல் அல்லது தவிர்த்தல்.

(8) நிர்மாண வேலை நடைபெறும் சுற்றாடலினுள் அந்நடவடிக்கை முடியும் வரையில் அச்சுற்றாடலை நுளம்புகள் பெருகாதவாறு பேணுதலும் கூரை கொங்கிறீட் தளங்களிலான கட்டடங்களில் அக்கூரையின் மீது எவ்விதத்திலும் நீர்த்தேங்கி இருக்காதவாறு பேணுதல்.

(9) ஏதாவது சுற்றாடலில் நீரை உறிஞ்சும் கிடங்கு, நீர் ஊறும் கிடங்கு அல்லது தாங்கியினுள் பரவக்கூடிய நுளம்புகள் வெளியில் வராத முறையில் அந்த குழிகள் தாங்கியை பொறியிட்டு பேணிச்செல்வதற்கு அல்லது அந்த கிடங்குகளில் ஒன்றுசேர்ந்துள்ள வாயுக்கள் வெளியில் செல்லுவதற்காக கொங்கிறீட் மூடியின்மேல் இரும்பு அல்லது PVC குழாய் பொருத்துவதை தவிர்த்தல்.

நுளம்பு குடம்பிகள் எனக் காணப்படும் சந்தர்ப்பத்தில் இடஞ்சார் நிலையத்துக்குரிய தண்டம் விதித்தல்.

6. (1) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதி 5 இன் உப விதி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தச் சுற்றாடலிலும் அதனுள் நீர்தேங்கி இருக்கக்கூடிய திறந்த தகரப் பேணி, போத்தல், பெட்டி, சிரட்டை, தேங்காய் கோம்பை அல்லது வேறெதேனும் பொருள் அல்லது பொருள் ஒன்றில் நுளம்பு குடம்பிகள் பெருகி உள்ளன என உரிய அதிகாரிக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரிக்குக் தெியவரும் சந்தர்ப்பத்தில் அக்குற்றம் நிகமும் இடத்தின் உரிமையாளர், வதிவாளர் அல்லது பொறுப்பாளர் அக்குற்றத்தை ஒப்புக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் அவரது விருப்பத்தின் பேரில் நீதவான் ஒருவரின் முன்னிலையில் குற்சச்சாட்டை முன்வைப்பதற்குப் பதிலாக வேறு எந்த அரசு அதிகாரியின் முன்னிலையில் அதிகாரம் பெற்ற அதிகாரியினால் ரூபா ஐந்நூறுக்குக் குறையாததும் ரூபா மூவாயிரத்திற்கு மேற்படாததும் இடஞ்சார் தண்டத்தை விதிக்க முடியும். நுளம்பு குடம்பிகள் உள்ள அல்லது இல்லாத நீர் நிறைந்துள்ள பாத்திரத்தை அல்லது பொருளை உரிய அதிகாரி அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியின் முன்னிலையில் பொருத்தமான விதத்தில் நீக்குவது அல்லது அழிப்பது அவ்விடத்தின் உரிமையாளரினால் அல்லது வதிவாளரினால் அல்லது பொறுப்பாளரினால் செய்யப்படல் வேண்டும்.

(2) 6 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள இடஞ்சார் தண்டப் பணம் மேல் மாகாண சபையின் அதிகார பிரதேசத்தினுள் அமைந்தள் பிரதேச செயலாளர் காரியாலயம் ஒன்றில் செலுத்தப்பட்டு சிட்டையைப் பெற வேண்டியதோடு அச்சிட்டையை 10 நாட்களுக்குள் அப்பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அவருக்கு எதிராக நீதவான் வழக்குமன்றம் ஒன்றின் முன்னிலையில் குற்றச்சாட்டு வழக்கு தொடர்வது சட்டரீதியானதாகும்.

இடத்திற்குரிய தண்டத்தை செலுத்துவது தவணை தவறும் இடத்து வழக்கு தொடர முடியும் என்பது.

(3) 6 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள இடஞ்சார் தண்டப் பணம் மேல் மாகாண சபை பொது நிதிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(4) மேற்குறிப்பிடப்பட்ட விதி 5 இன் உப விதி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும் விதி 5 இன் உபவிதிகள் 2, 3, 4, 5, 6, 7, 8 என்பவற்றில் காட்டப்பட்டுள்ள இடங்களில் நுளம்பு குடம்பிகள் பெருகுவதற்கு இடமளித்துள்ள, பெருகி உள்ள சகல சுற்றாடல்களினதும் உரிமையாளருக்கும் அல்லது வதிவாளருக்கும் அப்பிரதேசத்தில் உள்ள நீதவான் நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்பட்டு குற்றச்சாட்டைச் சமர்ப்பித்து இந்நியதிச் சட்டத்தின் விதி 8 இன் பிரகாரம் தண்டனை விதிப்பது கட்டாயமாகும்/சட்டரீதியானதாகும்.

7. மேலே விதி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப எந்தவொரு சுற்றாடலில் அல்லது அங்கு வைக்கப்பட்டுள்ள அல்லது பேணப்பட்டுவரும் ஏதேனுமொன்று நுளம்புகள் பெருகுவதற்கு ஏற்றதாக இருந்ததென உரிய அதிகாரிக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரிக்குத் தெரியவரும் சந்தர்ப்பத்தில் உரிய அதிகாரியினால் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியினால் எழுத்துமூல அறிவித்தல் ஊடாக கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையை அந்த எழுத்துமூல அறிவித்தலில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் கடைப்பிடிக்குமாறு அல்லது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அச்சுற்றாடலின் உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு அல்லது பொறுப்பாளருக்குக் கட்டளை இடப்பட முடியும்.

ஏதேனும் நடவடிக்கை எடுக்குமாறு உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு கட்டளையிட முடியும் என்பது.

(1) எந்தவொரு சுற்றாடலினுள் அதில் உள்ள ஏதேனும் கட்டடத்தில் உள்ள நுளம்புகள் பெருகுவதற்கு வசதியான விதத்தில் நீர் நிறைந்துள்ள மழை நீர் பீலி அல்லது பீலி அல்லது நீர்க்குழாய் அல்லது சாக்கடை நீர் நன்றாக வழிந்து ஓடும் விதத்தில் பழுதுபார்த்தல் ;

(2) ஏதேனும் சுற்றாடலில் உள்ள நீர் பாத்திரம் அல்லது மழை நீரை சேகரிப்பதற்கான தாங்கி, நீர்த்தாங்கி குளிரூட்டி, குளிர்சாதன் பெட்டி அல்லது நீரைத் தேக்கி வைப்பதற்கான வேறு பாத்திரத்தை மூடி நல்ல நிலையில் பேணுவதற்கு அதில் உள்ள நீரைக் காலத்திற்குக் காலம் வெளியேற்றக் கூடியவாறு கட்டுதல் அல்லது பழுதுபார்த்தல் ;

(3) ஏதேனும் சுற்றாடலில் உள்ள மழை நீரை அல்லது மலசலகூட நீரை சேகரிப்பதற்கான தாங்கியில், நீர்த் தாங்கியில் அல்லது நீர்த் தேக்கத்தில் இருந்து நீரை அகற்றி அவற்றைச் சுத்தஞ் செய்வதாலும்

சுற்றாடலின் உரிமையாளரினால் அல்லது வதிவாளரினால் அவை மேலும் பயன்படுத்தப்படாத போது அவற்றை மூடிவிடுதல் ;

(4) நுளம்புகள் பெருகுவதைத் தவிர்க்கும் விதத்தில் சுற்றாடலில் உள்ள கிணற்றைப் பேணுதல் ;

(5) நீர் சேர்வதற்கும் மாசடைதலுக்கும் இடமளிக்கும் ஏதேனும் தோண்டுதலில் ஏற்பட்ட குழி, பயன்படுத்தப்படாத கிணறு, மலசலகூடக் குழி, தடாகம் அல்லது வேறு ஏதேனும் இடத்தை நிரப்புதல், அதில் உள்ள நீரை அகற்றுதலும் அதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தலும் ;

(6) ஏதேனும் சுற்றாடலில் உள்ள சதுப்பு நிலம், நீரோட்டம், நீர்சேரும் இடங்கள் ஆகியவற்றில் இருந்து நீரை அகற்றுதல் அல்லது உயிரியல் முறை மூலம் ஆபத்தை நீக்குதல் ;

(7) நுளம்பு பெருகுவதற்கு வசதியளிக்கும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நீர்த் தாவரம் அல்லது வேறு ஏதேனும் நீர்த் தாவரம் அல்லது மரம் ஆகியவற்றை அகற்றுதல், பிடுங்கி எறிதல், அழித்தல் ;

(8) நிர்மாண வேலை நடந்து கொண்டிருக்கும் ஒரு சுற்றாடலில் அல்லது கொங்கிறீட் கூரைகள் உடனான கட்டடங்களில் நுளம்புகள் பெருகும் விதத்தில் நீர் தேங்கி நிற்காதவாறு பேணுதல்.

(9) ஏதாவது சுறற்றாடலில் நீரை உறிஞ்சும் கிடங்கு, நீர் ஊறும் கிடங்கு அல்லது தாங்கியினுள் பரவக்கூடிய நுளம்புகள் வெளியில் வராத முறையில் அந்த குழிகள் தாங்கியை பொறியிட்டு பேணிச்செல்வதற்கு அல்லது அந்த கிடங்குகளில் ஒன்றுசேர்ந்துள்ள வாயுக்கள் வெளியில் செல்லுவதற்காக கொங்கிறீட் மூடியின்மேல் இரும்பு அல்லது PVC குழாய் பொருத்துவதை தவிர்த்தல்.

(10) உரிய அதிகாரமுள்ளவர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியினால் அவசியம் எனக் கருதப்படும் வேறு ஏதேனும் படிமுறையை மேற்கொள்ளல்.

4, 5 மற்றும் 7 இனால் விதிக்கப்பட்ட கட்டளைகளுக்கு ஏற்ப செயற்படாதிருத்தல் குற்றமாகும்.

8. (1) இந்நியதிச் சட்டத்தின் விதி 2 இன் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றத்தை செய்தல் அல்லது விதி 5 இனால் விதிக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டளையை அல்லது கட்டளைகளை அல்லது விதி 4 இற்கும் 7 இற்கும் அல்லது 4 இற்கும் அல்லது 7 இற்கும் ஏற்ப செய்யப்படும் கட்டளை அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் காரியத்தை அத்துமீறும் அல்லது அதற்கு ஏற்ப செயற்படுதலை புறக்கணிக்கும் அல்லது விதி 6 இன் உப விதி 4 இற் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றிற்கு குற்றவாளியாவார் ;

(2) மேலே விதி (1) இற்கு ஏற்ப ஏதேனும் குற்றத்திற்கு குற்றவாளியாகும் எவரேனும் நீதிவான் ஒருவரின் முன்னிலையில் நடத்தப்படும் சிறு வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளி ஆக்கப்படும் போது பின்வரும் விதத்தில் தண்டனைக்கு உள்ளாவார் ;

(அ) அக்குற்றம் முதல் தடவை செய்த குற்றமெனின், ரூபா மூவாயிரத்திற்குக் குறையாததும் ரூபா இருபத்தையாயிரத்திற்கு மேற்படாததுமான தண்டமொன்றுக்கு அல்லது 6 மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கு அல்லது மேற்குறித்த இரண்டிற்கும் உட்படுத்துவதற்கு நீதிவானுக்கு கட்டளையிட முடியும்.

(ஆ) அக்குற்றம் இரண்டாவது தடவை அல்லது அதற்குப் பின்னர் செய்யப்படும் குற்றம் எனின் ரூபா ஐயாயிரத்திற்கு குறையாததும் ரூபா ஐம்பதாயிரத்திற்கு மேற்படாததுமான தண்டமொன்றுக்கு அல்லது 6 மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கு அல்லது மேற்குறித்த இரண்டிற்கும் உட்படுத்துவதற்கு நீதிவானுக்கு கட்டளையிட முடியும்.

(3) மேற்குறித்த உப விதி (1) இன் கீழ் குற்றம் புரிந்த ஒவ்வொரு நபருக்கும் உப விதி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளுக்கு மேலதிகமாக அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவரினால் குற்றம் கண்டுபிடிக்கப்பட்ட தினத்தில் இருந்து வழங்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட குறித்த நாட்களின் எண்ணிக்கைக்குப் பின்னரும் குற்றம் செய்யப்படுகிறது எனின் அக்குற்றம் செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபா இருநூறு வீதம் மேலதிக தண்டத்திற்கும் அவர் உட்படுவார் ;

(4) உபவிதி 8(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தண்டப் பணத்தை விதிப்பதற்கு மேலதிகமாக இந்நியதிச் சட்டத்தின் விதி 7 இன் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள காரியத்திற்கு ஒப்ப செயலாற்றுதலை புறக்கணித்தலின் மீது ஒருவர் குற்றவாளியாக்கப்படும் போது அக்காரியத்திற்கு ஏற்றவாறு செயலாற்றி பொதுசன சுகாதாரத்திற்குத் தீங்கான செயல்களைத் தவிர்ப்பதற்கு உரிய அதிகாரமுள்ளவரினால் அறிவிக்கப்பட்டுள்ள கட்டளைக்கு ஏற்ப செயலாற்றுமாறு அச்சுற்றாடலின் உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு பொறுப்பாளருக்கு நீதவானினால் கட்டளையிட முடியும்.

உரிய அதிகார முள்ளவரினால் சேவை நடத்தப்படல் வேண்டும் அல்லது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

9. இந்நியதிச் சட்டத்தின் 4 மற்றும் விதி 7 இன் கீழ் எழுத்துமூல அறிவித்தலைப் பெற்றுள்ள ஏதேனும் சுற்றாடல் ஒன்றின் உரிமையாளர் அல்லது வதிவாளர் அல்லது எவரேனும் ஒருவரினால் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் அதில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கு ஏற்ப செயற்படுதலை புறக்கணிக்கும் அல்லது அவ்வாறு செயற்படாது இருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது உரிமையாளரை அல்லது வதிவாளரை பொறுப்பாளரை உறுதியாக இனங்காண முடியாத அல்லது கஷ்டமான சந்தர்ப்பத்தில் உடனடியாக பொதுமக்களின் சுகாதாரத்திற்கான தீங்கை அகற்ற வேண்டும் என உரிய அதிகாரி அல்லது உரிய அதிகாரியின் அதிகாரத்தைப் பெற்ற அதிகாரி தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் :

(1) உரிய அதிகாரமுள்ளவரினால் தீர்மானிக்கப்பட்ட காரியங்களை உரிய அதிகாரமுள்ளவர் அல்லது உரிய அதிகாரமுள்ளவரின் அதிகாரத்தைப் பெற்ற அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் அந்த பொதுசன சுகாதாரப் பீடையை அகற்றுதல் ;

(2) அந்த பொதுமக்கள் சுகாதாரத் தீங்கை அகற்றும் போது அல்லது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஏற்படும் செலவுகளாக செலவழிக்கப்பட்ட பணம் அச்சுற்றாடலின் உரிமையாளரினால் அல்லது வதிவாளரினால் அல்லத உரிய நபரினால் செலுத்தப்பட வேண்டியதோடு அப்பணத்தொகை குறிப்பிடப்பட்டு வழங்கப்படும் வவுச்சருக்கு ஏற்ப அப்பணம் 03 வேலை நாட்களுக்குள் உரிய அதிகாரமுள்ளவருக்கு செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டு அச்சுற்றாடல் அமைந்துள்ள பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும் ;

(3) அப்பணத்தைக் குறித்த காலத்தினுள் உரியவாறு செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் அந்நபருக்கு அல்லது உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு எதிராக பொருத்தமான நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம் ;

விதி 9 இன் கீழ் செலவினமாக ஏற்கப்பட்ட செலவை மீளச்செலுத்துதல்.

(4) விதி 9 இன் உபவிதி (3) இன் கீழ் பணத்தை செலுத்துதலைப் புறக்கணிக்கும் சந்தர்ப்பங்களில் அக்காரியத்தை நிறைவேற்றும் போது அல்லத நடவடிக்கை எடுக்கும் போது ஏற்படும் செலவுகளாக அறவிடப்படவேண்டிய பணம் தொடர்பான விவரங்கள் அடங்கிய சான்றிதழ் ஒன்று உரிய அதிகாரமுள்ளவரினால் அக்குற்றம் நிகழ்ந்த பிரதேசம் தொடர்பாக நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதவானுக்கு முன்னால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அப்பணத்தை அறவிடுவதற்காக சிறு வழக்கு விசாரணையின் பின்னர் அச்சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பணத்தைச் செலுத்துமாறு நீதவான் கட்டளையிட முடியும் ;

(5) மேலுள்ள விதி (3) இற்குப் பொருத்தமானவாறு சட்டபூர்வ நடவடிக்கையின்போது உரிய நபர் விதி 5 (2) இற்கு ஏற்ப குற்றம் புரிந்த போது அந்நபருக்கு எதிராக பொதுசன பீடனத்தை ஏற்படுத்தியமை தொடர்பாக உரிய தண்டப் பணத்தையும் அப்பீடனத்தை நீக்குவதற்கு உரிய அதிகாரமுள்ளவர் அல்லது உரிய அதிகாரமுள்ளவரின் அதிகாரம் உள்ள அதிகாரியினால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்போது செலவிடப்பட்ட பணத்திற்கு மேலதிகமாக மொத்த தண்டப் பணத்தின் 50% மேலதிக தண்டப் பணத்திற்கும் அந்நபர் உட்படுவார் ;

(6) உபவிதி 8(3) இன் கீழ் தண்டமாக விதிக்கப்பட்ட எந்தப் பணமும் மற்றும் 9 (5) உபவிதி இன்கீழ் மேலதிக தண்டமாக விதிக்கப்பட்ட நீதவானினால் மாகாண சபை நிதியத்திற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும் ;

(7) மேலுள்ள 9 (5) உபவிதி இன் கீழ் ஏதேனும் சுற்றாடலில் காணப்படும் பொதுசன தீங்கினை அகற்றுவதற்காக உரிய அதிகாரமுள்ளவர் அல்லது உரிய அதிகாரமுள்ளவரின் அதிகாரம் உள்ள அதிகாரியினால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் போது செலவிடப்பட்ட பணத்தை அறவிட்ட பின் அந் நிதி நீதிவானினால் உரிய உத்தியோகத்தருக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

*கிருமிநாசினிகளை தெளித்தல்.*

10. (1) உரிய அதிகாரமுள்ளவரினால் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியினால் ஏதேனும் சுற்றாடலின் உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு அல்லது யாரேனும் பொருத்தமான நபருக்கு அனுப்பப்படும் எழுத்துமூல அறிவித்தல் மூலம் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கிருமிநாசினி வகையை அல்லது உயிரியல் கட்டுப்பாட்டு முறையை அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் நீர் தேங்கும், பொதுசன சுகாதாரத்திற்கு தீங்கு ஏற்படுத்தும் எனக் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் தடாகத்திற்கு அல்லது நீர் பாத்திரத்திற்கு, நீர்த் தேக்கத்திற்கு அல்லது வேறு ஏதேனும் இடத்திற்கு உரிய அதிகாரமுள்ளவரின் அறிவுறுத்தலின் மீது தெளிக்குமாறு அவ்வுரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு கட்டளையிடலாம்.

(2) குறித்த காலத்திற்குள் மேலுள்ள உபவிதி (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு ஏற்ப செயற்படுதலைப் புறக்கணிக்கும் ஒவ்வொரு நபரும் இச்சாசனத்தின் கீழ் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாவதோடு அவ்வாறான சந்தர்ப்பத்தில் அந்நபர் ; உபவிதி 8 (2) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்கு உட்படுவார்.

*உரிய அதிகாரமுள்ளவரை அல்லது அவரை ஒத்தவர்களை எதிர்த்தல் அல்லது தடைசெய்தல்.*

11. (1) உரிய அதிகாரமுள்ளவர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி இச்சாசனத்தின் கீழ் அவரது வேலையை அல்லது கடமையை செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள யாரேனும் நபரினால் அவ்வேலையை அல்லது கடமையை சட்டரீதியாக செய்யப்படும் போது அல்லது நிறைவேற்றப்படும் போது எந்தவோர் உரிமையாளரினால், வதிவாளரினால் அல்லது வேறு யாரேனும் நபரினால் அறிந்தறிந்து அல்லது வேண்டுமென்று உரிய அதிகாரமுள்ளவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு அல்லது அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்ட வேறு நபருக்கு எதிர்ப்பு காட்டுதல் அல்லது இடையூறு செய்யக்கூடாது;

(2) இவ்விதியின் உபவிதி (1) இன் விதிப் பிரமாணங்களை அத்துமீறி செயற்படும் எந்தவோர் உரிமையாளர், வதிவாளர் அல்லது வேறெந்த நபரும் இச்சாசனத்தின் கீழ் குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாவதோடு நீதவான் ஒருவரின் முன்னிலையில் நடத்தப்படும் சிறு வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படும் போது ரூபா பத்தாயிரத்திற்குக் குறையாததும் ரூபா ஐம்பதாயிரத்திற்கு மேற்படாததுமான தண்டம் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது தண்டமும் சிறைத் தண்டனை ஆகிய இரண்டிற்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

*எடுக்கப்படும் எந்த நடவடிக்கையினது வினைத் திறனைக் குறைத்தல்.*

12. (1) (அ) ஏதேனுமொரு சுற்றாடலில் நடத்தப்படும் அல்லது கடைப்பிடிக்கப்படும் நுளம்புகள் பெருகுவதனை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கையை பூர்த்தி செய்யாதிருப்பதற்கு இடமிருத்தல் அல்லது,

(ஆ) ஏதேனும் சுற்றாடலில் நடத்தப்படும் அல்லது கடைப்பிடிக்கப்படும் பொதுசன சுகாதார தீங்கைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளின் வினைத்திறனைக் குறைப்பதற்கு இடமளிக்கும் எந்த செயலையும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவ்வாறான நடவடிக்கையை அச்சுற்றாடலின் உரிமையாளர் அல்லது வதிவாளர் அல்லது வேறு யாரேனும் நபர் அறிந்தறிந்து அல்லது வேண்டுமென்று செய்யக்கூடாது.

(2) உபவிதி (1) இன் விதிப் பிரமாணங்களை அத்துமீறி செயற்படும் எந்தவோர் உரிமையாளர், வதிவாளர் அல்லது வேறு யாரேனும் நபர் இச்சாசனத்தின் கீழ் குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாவதோடு நீதவான் ஒருவரின் முன்னிலையில் நடத்தப்படும் ஒரு சிறு வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாகும் போது ரூபா ஐயாயிரத்திற்குக் குறையாத, ரூபா இருபத்தையாயிரத்துக்கு மேற்படாத தண்டம் ஒன்றுக்கு உட்படுத்தப்படல் வேண்டும் ;

(3) மேலுள்ள உபவிதி (2) இன் தண்டப் பணத்திற்கு மேலதிகமாக நடத்திய அல்லது வினைத்திறனைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட செயலை மீண்டும் சரியாக செய்யுமாறு நீதவானினால் கட்டளையிட முடியும்.

13. எந்த சுற்றாடலிலும் ஒருவருக்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் வசிக்கும் போது அல்லது ஒரு சொத்து ஒருவருக்கு மேற்பட்ட எண்ணிக்கையானோருக்கு கூட்டாக உரிமையாக இருக்கும்போது இந்நியதிச் சட்டத்தின் விதிப் பிரமாணங்களை அமுலாக்கும் காரியத்திற்காக இந்நியதிச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் விதிக்கப்படும் எந்தக் கட்டளைக்கு ஏற்ப செயற்படுதல் அல்லது புறக்கணித்தலுக்கு அவ்வாறான ஒவ்வொரு வதிவாளரும் அல்லது ஒவ்வோர் உரிமையாளரும் தனித் தனியாக பொறுப்பிற்கு உட்பட வேண்டும்.

கூட்டு உரிமையாளர்களும் கூட்டு வதிவாளர்களும் தனித்தனியாக உட்படுத்தப்படல் வேண்டும்.

14. (1) மேல் மாகாண சபை அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள எந்தவொரு மாகாண உள்ளூராட்சித் தபானங்களினால் அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அல்லது மாகாணஞ்சார் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அல்லது தாழ்நில அபிவிருத்தி சபையினால் வேறு ஏதேனும் அதிகார சபையினால் அல்லது நிறுவனத்தினால் உரியவாறு பேணுவதற்கு கட்டளையிடப்பட்டுள்ள ஏதேனும் வடிகால், ஆறு, நீரோட்டம், சதுப்பு நிலம் மயானம், குப்பைகளை இடும் இடம் அல்லது வேறு இடத்தை அவ்வாறு உரியவாறு பேணுதல் அம்மாகாண உள்ளூராட்சித் தாபனங்களினால் புறக்கணிக்கப்படுதல் அல்லது கைவிடப்படுதல் என்பதனால் அவ்விடம் நுளம்புகள் பெருகுவதற்கு வசதியான இடமாக அமைந்துள்ளது எனக் கண்டுபிடிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அந்நிலையை சீராக்குவதற்காக நுளம்புகள் பெருகுதலைத் தவிர்ப்பதற்கு அவசியம் அல்லது உசிதம் என உரிய அதிகாரமுள்ளவரினால் கருதப்படும் கட்டளையை வழங்குவதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு.

வடிகால்கள் ஓடைகள் போன்றவற்றை பேணுவதற்கு விதிக்கப்பட்டுள்ள நிர்வாக அதிகார சபையினால் அவற்றை பேணுதல் புறக்கணிக்கப்பட்டு இருப்பின் அவர்களுக்குக் கட்டளை இடல் வேண்டும்.

(2) உபவிதி (1) இன் கீழ் இடப்படும் ஏதேனும் கட்டளைக்கு ஏற்ப செயற்படுதலைப் புறக்கணிக்கும் ஏதேனும் உள்ளூராட்சித் தாபனம் ஒன்று அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது மாகாணஞ்சார் வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது நகர அபிவிருத்தி சபை அல்லது தாழ்நில அபிவிருத்தி சபை அல்லது வேறு ஏதேனும் அதிகார சபை அல்லது நிறுவனம் இருப்பின் இந்நியதிச் சட்டத்தின்கீழ் குற்றமொன்றுக்கு குற்றவாளியாவதோடு அக்குற்றத்திற்காக வழக்கு தொடர்வதற்கு உரிய அதிகாரமுள்ளவர் அந்த மாகாண நிர்வாக நிறுவனத்திற்கு எதிராக அல்லது அம்மாகாண நிர்வாக நிறுவனத்திற்காக செயற்படுவதற்கு மாகாண நிர்வாக நிறுவனங்களுக்குப் பொருத்தமான எந்த சட்டத்தின் கீழும் நியமிக்கப்பட்ட வேறு உரிய அதிகாரமுள்ளவருக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும் ;

15. இந்நியதிச் சட்டத்தின் கீழ் உரிய அதிகாரமுள்ளவர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி அல்லது உரிய அதிகாரம் பெற்ற அதிகாரி அல்லது உரிய அதிகாரமுள்ளவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிக்கு சாதாரண நேரத்தினுள் ஏதேனும் சுற்றாடலுக்குள் பிரவேசித்து :

உட்பிரவேசித்து பரீட்சிப்பதற்கான அதிகாரம்.

(1) இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தீங்குகளை அல்லது பொதுசன சுகாதாரத்திற்கு தீங்கான வேறு தீங்குகளை பரீட்சிப்பதற்கு அல்லது சோதிப்பதற்கு அதிகாரம் உண்டு ;

(2) உரிய அதிகாரமுள்ளவரினால் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியினால் அல்லது உரிய அதிகாரமுள்ளவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியினால் வதிவாளருக்கு அல்லது உரிமையாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப செயலாற்றப்பட்டுள்ளதா எனப் பரீட்சிப்பதற்கு அல்லது சோதிப்பதற்கு அதிகாரம் உண்டு.

16. (1) உரிய அதிகாரமுள்ளவரினால் அவசியம் அல்லது பொருத்தம் எனக் கருதப்படும் எந்த சந்தர்ப்பத்திலும் இச்சாசனத்தினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் வேலையை அல்லது கடமையை செயற்படுத்துவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு மேல் மாகாண பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அதிகாரம் வழங்க முடிவதோடு அவ்வாறு வேலை அல்லது கடமை எவரேனும் அதிகாரி ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டதெனின் அவ்வதிகாரியினால் உரிய அதிகாரமுள்ளவரின் கட்டுப்பாட்டுக்கும் மேற்பார்வைக்கும் கீழ் அவ்வேலையும் கடமையும் நிறைவேற்றப்படல் வேண்டும் ;

உரிய அதிகாரமுள்ளவரின் அதிகாரங்களை இன்னொருவருக்கு ஒப்படைத்தல்.

உரிய அதிகாரமுள்ளவர் கட்டளை இடுதல்.

(2) இச்சாசனத்தின் விதிப் பிரமாணங்களும் அவற்றின்கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் கட்டளையையும் செயற்படுத்துதல் தொடர்பாக உரிய அதிகாரமுள்ளவரினால் அவசியம் எனக் கருதப்படும் கட்டளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கு அல்லது மாகாண நிர்வாக சுகாதார பரீட்சகருக்கு அல்லது மாகாண நிர்வாக நிறுவனமொன்றின் பிரதம சுகாதார பரீட்சகருக்கு அல்லது பொதுசன சுகாதார பரீட்சகருக்கு செய்ய முடிவதோடு அவ்வாறு கட்டளை பெறப்பட்ட ஒவ்வோர் அிகாரியினாலும் அவற்றுக்கு ஏற்ப செயற்படுத்தப்படல் வேண்டும் ;

(3) இவ்விதியின் உபவிதி (1) இன்கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட எந்த அதிகாரியினாலும் அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட வேலையையும் கடமையையும் செயற்படுத்தும் போதும் நிறைவேற்றும் போதும் இந்நியதிச்சட்டத்தின் விதி 12 இன் கீழ் உரிய அதிகாரமுள்ளவருக்கு வழங்கப்பட்டுள்ளவாறே ஏதேனும் பிரவேசிப்பும் பரீட்சித்தலும் செய்யும் அதிகாரம் செயற்படுத்தப்படவேண்டியதோடு அவ்வதிகாரிக்கு ஏற்படுத்தப்படும் தடங்கல் இந்நியதிச்சட்டத்தின் விதி 9 இன் கீழ் குற்ற மொன்றாகும்.

குற்றம் சங்கேத குற்றமாக இருத்தல் வேண்டும்.

17. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட குற்ற வழக்குக் கட்டளைக் கோவைச் சட்டத்தின் முரண்பாடு எதற்காக இருப்பினும் இந்நியதிச்சட்டத்தின் கீழுள்ள ஒவ்வொரு குற்றமும் அச்சட்டத்தின் பொருள்கோடலுக்கும் அதன் செயற்பாட்டிற்கும் சங்கேத குற்றமாகக் கருதப்படல் வேண்டும்.

உரிய அதிகாரமுள்ளவர் போன்றோர் சமாதான அதிகாரிகளாக இருத்தல் வேண்டும்.

18. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட குற்றவழக்குக் கட்டளைக்கோவையின் கீழ் சமாதான அதிகாரிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் காரியத்திற்கு உரிய அதிகாரமுள்ளவர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி அல்லது அவரது வேலையும் கடமையும் ஒப்படைக்கப்பட்டுள்ள வேறு எவரேனும் நபர் அவ்வேலையை அல்லது கடமையை நிறைவேற்றும் போது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட குற்ற வழக்குக் கட்டளைக் கோவைச் சட்டத்தின் கருத்திற்கேற்ப சமாதான அதிகாரிகளாகக் கருதப்படல் வேண்டும்.

அறிவித்தலை ஒப்படைத்தல்.

19. இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றம் புரியும் எவரேனுமொரு நபரெனின் அந்நபருக்கு ஒப்படைக்க வேண்டிய அறிவித்தலை நேரடியாக அவரிடம் அல்லது அவர் வசிக்கும் அச்சுற்றாடலில் வசிக்கும் வேறொருவரிடம் ஒப்படைத்தலின் மூலம் அல்லது அச்சுற்றாடலில் தெளிவாகத் தெரியக்கூடிய ஓரிடத்தில் ஒட்டுவதன் மூலம் அல்லது பதிவுத்தபாலில் கிடைப்பதற்கு வழிசெய்வதன் மூலம் மேற்கொள்ளலாம்.

வழக்குகளை தொடர்தல்.

20. இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது குற்றமொன்றைப் புறக்கணித்தல் தொடர்பாக வழக்கு தொடரல் ;

(அ) அதிகாரம் பெற்றவரினால் அன்றி/அவருடன்

(ஆ) அக்குற்றம் கண்டுபிடிக்கப்பட்ட தினத்தில் இருந்து 03 மாத காலப்பகுதி கழிந்த பின்னர் அல்லது செய்யலாகாது.

விதிகள்.

21. மேல் மாகாண விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு பின்வரும் விடயங்கள தொடர்பாக விதிகளைத் தொகுக்க முடியும்.

(1) (அ) எந்தவொரு சுற்றாடலின் உரிமையாளரினால் அல்லது வதிவாளரினால் அல்லது எந்தவொரு மிருகத்தின உரிமையாளரினால் எந்த இடத்திலேனும் சேர்த்து வைக்கப்பட்டுள்ள தூசு, சாம்பல், குப்பை, கூளம், உரம், மிருகங்களின் கழிவுப் பொருள்கள், மலம் என்பவற்றை அகற்றுதல் தொடர்பாகவும் அவ்வாறனவொன்று எந்த நபருக்கேனும் தீங்காகுமாறு வீதியொன்றில் அல்லது வீதியோரத்தில் ஓரிடத்தில் வைத்தலைத் தவிர்த்தல்;

(ஆ) சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய தடாகம், நீரோட்டம், திறந்த குழிகள், வடிகால், அசுத்தமான நீர் அல்லது பொருள்கள் உள்ள அல்லது சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் நீர் வழிந்தோட செய்தல், அவ்வாறான இடத்தைச் சுத்தஞ் செய்தல், மூடுதல் அல்லது நிரப்புதல் ;

(இ) எந்த சுற்றாடலினதும் உரிமையாளரினால் அல்லது வதிவாளரினால் அச்சுற்றாடலின் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக உள்ளவரினால் வீடுகள், கட்டடங்கள், சமயத் தளங்கள், ஏதேனும் பொது இடங்கள், மக்கள் நடமாடும் இடங்கள் ஆகியவற்றை சுத்தஞ் செய்தல், தூய்மையாக்கல், அவற்றுக்குக் காற்றோட்டத்தை வழங்குதல் அவற்றின் களைகளை அழித்தல்;

(ஈ) தொற்று நோய்கள், இடத்திற்குரிய நோய்கள் அல்லத தொடுகையினால் பரவும் நோய்கள் ஆகியவற்றை தவிர்த்தலும் ஒழித்தலும் ;

(உ) உரிய அதிகாரமுள்ளவரினால் அல்லது அதிகாரம்பெற்ற அதிகாரியினால் அல்லது இந்நியதிச் சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட ஏதாவது கட்டளைகளின் விடயங்களுக்காக உபயோகிக்க கூடிய படிவங்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் போது பயன் படுத்தப்படும் படிவம் ;

(ஊ) பொதுசன சுகாதார பீடனத்தை தவிர்ப்பதற்கு ஏதேனும் சுற்றாடலின் உரிமையாளரினால் அல்லது வதிவாளரினால் மேற்கொள்ளப்படவேண்டிய செயலொழுங்கும் பயன்படுத்த வேண்டிய கிருமிநாசினி வகையும் ;

(எ) பொதுசன சுகாதார தீங்கைத் தவிர்ப்பதற்காக நுளம்பினால் பரவும் நோய்களை ஒழித்தல் பற்றிய வழிகாட்டல்களை வழங்குதல் ;

(ஏ) இந்நியதிச் சட்டத்தின்கீழ் தவறு ஒன்று தொடர்பாக நீதிமன்றத்தினால் அமுல்படுத்தப்படும் தண்டத்திற்கு உரியதாக அறவிடப்படும் தண்டப்பணத்தில் ஏதாவது ஒரு நிதியை குற்றவாளியை இனங்காண முயன்ற அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அல்லது உத்தியோகத்தருக்கு உபகாரப் படியாக வழங்குதல் ;

(ஐ) இந்நியதிச் சட்டத்தின் விதிப் பிரமாணங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான வேறெந்த விடயமும்.

(2) அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியதோடு அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து அல்லது அக்கட்டளையில் குறிப்பிடப்பட்ட பிந்திய திகதியில் இருந்து அவை செயற்படுத்தப்படல் வேண்டும் ;

(3) அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் முடிந்தளவு விரைவில் அங்கீகாரத்திற்காக மேல் மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ;

(4) அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாத எந்த விதியும் அந்த அங்கீகரிக்கப்படாத திகதியில் இருந்து ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படவேண்டும் ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எவற்றிற்கும் அதனால் பாதிப்பு ஏற்படலாகாது ;

(5) எந்த விதியும் ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

22. இந்நியதிச் சட்டத்தின் கீழ் உரிய அதிகாரமுள்ளவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள எந்த வேலையை அல்லது கடமையை நிறைவேற்றும் அதிகாரம் இச்சாசனத்தின் விதி 13 இன் உபவிதி (2) கீழ் யாரேனும் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அல்லது பொதுசன சுகாதார பரீட்சகருக்கு ஒப்படைக்கப்படும்போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அந்த சுகாதார வைத்திய அதிகாரியினால் அல்லது பொதுசன சுகாதார பரீட்சகரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்படுமென உத்தேசித்த எந்த செயல் தொடர்பாக அச்சுகாதார வைத்திய அதிகாரிக்கு அல்லது பொதுசன சுகாதார பரீட்சகருக்கு எதிராக சிவில் அல்லது குற்ற வழக்குத் தொடரப்படாதிருத்தல் வேண்டும்.

நேர்மையாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பாக பாதுகாப்பு.

அரச உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்பது.

23. பொதுசன சுகாதார தீங்கை தவிர்த்துக் கொள்வதற்காக இந்நியதிச் சட்டத்தின்கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளின் போது உதவியளித்தல் சிவில் பாதுகாப்பு அதிரடிப் படை, கிராம அதிகாரி, மாகாண உள்ளூராட்சி தாபனங்கள் உட்பட சகல அரச அதிகாரிகள் ஆகியோரின் பொறுப்பாகும்.

உரிய அதிகாரமுள்ளவர்.

24. இந்நியதிச் சட்டத்தின் காரியத்திற்காக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரிய அதிகாரமுள்ளவராக இருக்க வேண்டியதோடு இச்சாசனத்தின் விதிப் பிரமாணங்களை பலனளிக்கக்கூடியவாறு செயலில் ஈடுபடுத்துவதற்கு அவர் பொறுப்பேற்க வேண்டும்.

25. உரிய அதிகாரமுள்ளவரினால் இந்நியதிச் சட்டத்தின் வேலைகள், கடமைகள், அதிகாரங்கள் ஆகியன அமைச்சின் செயலாளரின் கட்டளைகளுக்கும் மேற்பார்வைக்கும் கீழ் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

அதிகாரம் பெற்ற அதிகாரிகள்.

26. (1) உரிய அதிகாரமுள்ளவரினால் அவசியமானதும் பொருத்தமானதும் எனக் கருதப்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இச்சாசனத்தினால் அவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள எந்தக் காரியத்தையும் அல்லது கடமையையும் செயற்படுத்துதலுக்கு அல்லது நிறைவேற்றுவதற்கு உரிய அதிகாரமுள்ளவரின் கட்டுப்பாட்டிற்கும் மேற்பார்வைக்கும் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரிகளை நியமிக்க முடியும்.

(2) மேலுள்ள உபவிதியின் கீழ் மேல் மாகாணத்தின் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், மாகாண நிர்வாக பொதுசன சுகாதார பரீட்சகர்கள், மாவட்ட நிர்வாக சுகாதார பரீட்சகர்கள் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களின் நிர்வாக பொதுசன சுகாதார பரீட்சகர்கள், மேல் மாகாணத்தின் பொருத்தமான மாகாண உள்ளூராட்சி தாபனங்களில் உள்ள பிரதம பொதுசன சுகாதார பரீட்சகர்கள், மற்றைய சகல பொதுசன சுகாதார பரீட்சகர்கள் ஆகியோரே அதிகாரம் பெற்ற அதிகாரிகளாக இருத்தல் வேண்டும். இந்த அதிகாரம் பெற்ற அதிகாரிகள் தமது கடமைத் துறைக்கு மட்டும் இந்நியதிச் சட்டத்தின்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரிகளாக இருத்தல் வேண்டும்.

கருத்து முரண்பாடு ஏற்படும்போது சிங்கள மொழி உரை வலிதாகும்.

27. இச்சாசனத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில உரைகளிடையே பொருத்தப்பாடு இன்மை இருந்தால் அப்போது சிங்கள மொழி உரை அமுலாக்கப்படல் வேண்டும்.

பொருள்கோடல்.

28. பதங்கள் தொடர்பாக பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி இந்நியதிச்சட்டத்தில்.

"அமைச்சர்" என்பதன் கருத்து மேல் மாகாண மாகாண சபையின் சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்பதாகும்.

"அமைச்சு செயலாளர்" என்பதன் கருத்து மேல் மாகாண மாகாண சபையின் சுகாதார விடய அமைச்சின் செயலாளர் என்பதாகும்.

"மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்" என்பதன் கருத்து மேல் மாகாணத்தில் அல்லது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது அப்பதவியில் பதில் கடமையாற்றுபவர் அல்லது கடமைகளை செய்வதற்கு அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி என்பதாகும்

"பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்" என்பதன் கருத்து மேல் மாகாணத்தின் மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மேல் மாகாணத்தின் சுகாதார சேவைகள் திணைக்களங்களின் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் அல்லது அப்பதவியில் பதில் கடமை புரியும் அல்லது கடமைகளை செய்வதற்கு அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி என்பதாகும்

"சுகாதார வைத்திய அலுவலர்' என்பதன் கருத்து மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சுகாதார வைத்திய அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது அப்பதவியின் வேலையை செய்வதற்கு அல்லது கடமைகளை செய்வதற்கு அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் என கருதப்படுவதோடு ஏதேனும் மாநகர சபை சேவையில் ஈடுபட்டுள்ள பிரதம சுகாதாரவைத்திய அலுவலர் மேலதிக சுகாதார வைத்திய அலுவலர் அல்லது சுகாதார வைத்திய அலுவலர் என்பதாகும்

*"மாகாண நிர்வாக பொதுசன சுகாதார பரீட்சகர்" என்பதன் கருத்து மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மாகாண நிர்வாக சுகாதார பரீட்சகர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது அப்பதவியின் வேலைகளைச் செய்வதற்கு அல்லது கடமைகளை செய்வதற்கு அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி என்பதாகும்.*

*"மாவட்ட பொதுசன சுகாதார பரீட்சகர்" என்பதன் கருத்து மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பொதுசன நிர்வாக சுகாதார பரீட்சகர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அல்லது அப்பதவியின் வேலைகளைச் செய்வதற்கு அல்லது கடமையை செய்வதற்கு அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி என்பதாகும்.*

*"நிர்வாக பொதுசன சுகாதார பரீட்சகர்" என்பதன் கருத்து மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நிர்வாக பொது சுகாதார பரீட்சகர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது அப்பதவியின் வேலைகளைச் செய்வதற்கு அல்லது கடமைகளை செய்வதற்கு அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி என்பதாகும்.*

*"பிரதம பொதுசன சுகாதார பரீட்சகர்" என்பதன் கருத்து மேல் மாகாணத்தின் மாகாண உள்ளூராட்சி தாபனங்கள் ஒன்றில் பிரதம பொதுசன சுகாதார பரீட்சகராக நியமிக்கப்பட்டுள்ள அல்லது அப்பதவியின் வேலைகளைச் செய்வதற்கு அல்லது கடமைகளை செய்வதற்கு அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி என்பதாகும்.*

*"பொதுசன சுகாதார பரீட்சகர்" என்பதன் கருத்து மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பொதுசன சுகாதார பரீட்சகர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது அப்பதவியின் வேலையைச் செய்வதற்கு அல்லது கடமைகளை செய்வதற்கு அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி என்பதாகும்.*

*"வதிவாளர்" என்பதன் கருத்து தனக்காக அல்லது வேறு யாரேனும் ஒருவரின் பிரதிநிதியாக அல்லது ஏதேனும் சுற்றாடலுக்குப் பொறுப்பாளியாக, முகாமைத்துவத்திற்கு அல்லது நிர்வாகத்திற்கு பொறுப்பாக உள்ளவர் அல்லது அச்சுற்றாடலில் வசிப்பவர் என்பதாகும்.*

*"உரிமையாளர்" என்பதன் கருத்து இணை உரிமையாளராக, குத்தகைக்காரராக ஏதேனும் உரிமை உள்ள அச்சுற்றாடலின் வாடகையை அல்லது உற்பத்தியைப் பெறுபவர் அல்லது அச்சுற்றாடலின் உரிய பராமரிப்பிற்குப் பொறுப்பு கூறவேண்டிய எந்த நபர் அல்லது நிறுவனம், கூட்டுத்தாபனம் அல்லது அதிகாரி என்பதாகும்.*

*"பொறுப்பாளர்" என்பதன் கருத்து ஏதாவது நபர் ஒருவரது பிரதிநிதி ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராக ஏதாவது சுற்றாடல் ஒன்றின் பொறுப்பு, முகாமைத்துவம், நிர்வாகத்துக்கு பொறுப்பாக உள்ள அல்லது அச்சுற்றாடலின் அட்டோனியட் அதிகாரம் உள்ள அல்லது இளம்பராய ஒருவருக்காக நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நபர் என்பது கருத்தாகும்.*

*"நபர்" என்பதன் கருத்து எந்த நபர் அல்லது ஏதேனும் நிறுவனம் அல்லது தனியார் சபை என்பதாகும்.*

*"மக்கள் தீங்கு" உடல், உள, பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளை ஒழுங்காக பேணி செல்வதற்கு தடையாக மனிதனினால் மேற்கொள்ளப்படும் நீர் மாசடைதல், வளி மாசடைதல் மற்றும் மண் மாசடைதல் அதிக ஒலியின் மூலம் அல்லது ஏதாவது செயற்பாடின் ஊடாக மேற்கொள்ளப்படும் தீங்குகளே மக்கள் தீங்குகள் ஆகும்.*

*"சுற்றாடல்" என்பதன் கருத்து ஏதேனும் இடமொன்றும் அதன் மீது அமைந்துள்ள ஏதேனும் கட்டடம் அல்லது அவ்வாறான கட்டடத்தின் பகுதியொன்று என்பதாகும்.*

*"பொருட்கள்" என்பதன் கருத்து நபர் ஒருவரினால் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய முறையில் பாவனைக்கு அல்லது உபயோகத்திற்கு எடுக்க முடியாத கண்ணாடி, உலோக, மர, பிளாஸ்டிக் பைபர் அல்லது ரபர் உள்ளிட்ட பொருளினாலும் தயாரிக்கப்பட்ட பொருள் என்ற கருத்தாகும்.*

*7 - 337*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

4 - PG 001366